# திருக்குறள் காட்டும் விருந்தோம்பல்

கு.சுரேஷ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்டெக் ரங்கா சங்கு கலைக் கல்லூரி,
ஆவடி,சென்னை – 600062. thamizhsuresh1@gmail.com

39

**ஆய்வுச் சுருக்கம்**

விருந்தோம்பல் பண்பு என்பது சாதி, மதம், இனம், மொழி, என்று பார்க்காமல் பண்டையகாலம் தொட்டு இன்று வரையிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதனை பல்வேறு தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அந்த வகையில் திருக்குறள் காட்டும் விருந்தோம்பல் என்ற பண்பினை பின்வரும் தலைப்புகளின் மூலம் **விருந்தினர்களின் பண்பு, போற்றும் விதம், சாவா மருந்து, விளையும் பயிர் , நல்விருந்து, செல்வம் பெருகுதல்** என விருந்தினால் வரக்கூடிய நன்மைகளை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**திரவுச்சொற்கள்**

திருக்குறள், திருவள்ளுவர், விருந்தோம்பல், உபசரிப்பு, முகமலர்ச்சி, பண்பு, சாவாமருந்து, பயிர் விளைதல், நல்விருந்து, செல்வம் பெருகுதல், பணயம் வைத்தல்

**முன்னுரை**

படி ஏறி வந்தவரை வாருங்கள் உட்காருங்கள் தாகத்துக்கு என்ன வேண்டும் என்று இன்முகத்தோடு கேட்டு உபசரிக்கிறவர் தான் பண்பாளர், நீரின்றி வாழும் பயிர் கண்டு நெஞ்சம் உருகுவது மேலோர் இயல்பு, அடுத்தவர் துயர் கண்டு கலங்காத கண்கள் என்ன கண்கள், இறங்காத மனம் என்ன மனம், நமக்குள் நூறு இனங்கள் கிடையாது, இருப்பது ஓரினம் அது மனித இனம், உணர்வு என்ற ஒன்றால் மட்டுமே அடுத்தவர்களை நாம் உறவுகளாக எண்ணிப் பார்க்க முடியும்.

**“தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இச்சகத்தினை அழித்திடுவோம்”** என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கினங்க விருந்தோம்பல் பண்பு சாதி, மதம், இனம், மொழி, என்று பார்க்காமல் அக்காலம் முதற்கொண்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதனை பல்வேறு தமிழ் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அந்த வகையில் திருக்குறள் காட்டும் விருந்தோம்பல் என்ற பண்பினை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**விருந்தோம்பலின் பண்பு**

விருந்தோம்பல் என்பது இயல்பாக நமது உறவினர்களுக்கும் நன்பர்களுக்கும் நாம் விருந்துபடைப்பதோ அல்லது நாம் சென்று உறவினர் நண்பர் என்ற முறையில் விருந்து உண்பதோ அன்று நம் வீடு தேடி வந்தவர்களை முகமலர்ச்சியுடன் வரவெற்று மனமகிழ்ந்து உணவளிப்பதே விருந்தோம்பலின் சிறந்த பண்பாகும். விருந்தினர்களை பார்த்ததும் முகமலர்ச்சியோடு பார்த்தலும் இன்முகத்தோடு உணவளிப்பதும் என்ற உபசரிப்பவருக்கு நல்ல குணமானது. இதனை திருவள்ளுவர்,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து."** **( குறள். 90)**

என்ற குறளின் மூலம் விருந்தினரை உபசரிப்பவருக்கு முக்கியமாக இருக்க வேண்டியது மூன்று குணநலன்கள் அவை 1. விருந்தினர் சற்று தூரத்தில் இருக்கும்போது அவர்களைப் பார்த்தவுடன் முகம் மலர்தல். 2. முகம் மலர்வதால் விருந்தினர் நெருங்கி வருவார்கள் அவ்வாறு நெருங்கி வந்ததும் இனிய சொற்களை சொல்லுதல். 3. இவ் இரண்டின் காரணமாக அவர்கள் விருந்தாக வர உடன்பட்டால் அவர்களை உபசரித்தல் இம்மூன்றில் முதலாவதான முகம் மலர்கள் இல்லை என்றால் விருந்தினர் தூரத்தில் இருக்கும்போதே மனம் வாடி திரும்பி போய் விடுவர். எனவே கையால் எடுத்து மூக்கினால் முகராவிட்டால் வாடாத அனைத்தும் பூவை காட்டிலும், பார்த்தாலே வாடும் விருந்தினர்கள் மேன்மையானவர்கள் என்பது கருத்தாகும். எனவே விருந்தினரை உபசரிப்பவர்களுக்கு முதலில் இருக்க வேண்டியது முகம் மலர்தல் தான் என்று கூறுகின்றார்.

மெல்லியதாக இருக்கும் அனிச்சம் பூ நுகர்ந்தாலே வாடி விடுமாம், ஆனால் விருந்தினர்களை முகம் திரிந்து பார்த்தாலே வாடி விடுவார்கள் என்கிறார் வள்ளுவர். பூவைக் காட்டிலும் மென்மையானவர்கள் விருந்தினர்கள். எனவே அவர்களை மனமகிழ்வோடு வரவேற்று உபசரிக்க வேண்டும் அவ்வாறு உபசரிக்கவில்லை எனில் விருந்தினர்களின் நிலை **"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"** என்னும் பழமொழிக்கு ஏற்ப உள்ளத்தில் ஏற்பட்ட வருத்தத்தை எவ்வளவு ஒப்பனைகளோடு அலங்கரிக்கப்பட்ட முகமானாலும் தெளிவாக நமக்கு காட்டிவிடும். ஆதலால் விருந்தினர்களை இன் முகத்தோடு வரவேற்று உபசரித்தல் விருந்தோம்பலின் பண்பாக பண்டைய தமிழர்களின் குணத்திற்கும் பண்பிற்கும் இக்குறளே சான்றாகும்.

விவேக சிந்தாமணி என்னும் நூலிலும் மலர்ந்த முகத்துடன் இடுவதே மாபெரும் விருந்து என்று பின்வரும் பாடல் ஒன்று

**"ஒப்புடன் முகம லர்ந்தே**
**உபசரித்து உண்மை பேசி**
**உப்பிலாக் கூழ்இட் டாலும்**
**உண்பதே அமிர்த மாகும்**
**முப்பழ மொடுபா லன்னம்**
**முகங்கடுத் திடுவா ராயின்**
**கப்பிய பசியி னோடு**
**கடும்பசி ஆகுந் தானே."** **( வி.சிந்தாமணி. 4 )**

(நாம் விருந்துக்குச் செல்லும் வீட்டில் உள்ளவர்கள் நம்மைக் கண்டவுடன்) இணக்கமுடன் முகம் மகிழ்ச்சியால் விகசிக்கப்பெற்று, நமக்கு வேண்டிய மரியாதைகளைச் செய்து நம்மிடத்து உண்மையையே பேசி, உப்பில்லாத கஞ்சியை வார்த்தால்கூட அதைக் குடித்தால் அதுதான் நமக்கு அமிர்தத்துக்குச் சமமானதாகும். (நம்மைச் சரிவர உபசரிக்காமல் நம்மிடத்து அன்பின்றி) முகத்தைச் சுளித்துக் கொண்டே மூவகைப் பழங்களோடு பாற்சோற்றை அளித்தபோதிலும் (அவை நமக்குத்

திருப்தியை அளிப்பதில்லை அவற்றால்) ஏற்கனவே நிறைந்திருக்கும் பசியோடு மேலும் கடும்பசி ஏற்பட்டுவிடும் என்று விவேக சிந்தாமணி நூலில் முகமலர்ச்சியோடு விருந்து உபசரிப்பதை பற்றி அறிய முடிகிறது.

**விருந்தினரை போற்றும் விதம்**

**"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று." ( குறள். 83 )**

தன்னை நினைத்து வந்த விருந்தினரை நாள்தோறும் உபசரிப்பவனின் இல்வாழ்க்கை வறுமையால் துன்பப்பட்டுக் கெட்டு விடாது. நாள்தோறும் விருந்து உபசரிப்பவனுக்கு அவ்விருந்து உபசரிப்பதால் செல்வம் குறையாமல் மேன்மேலும் வளரும் என்பது கருத்து.

**"அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்." ( குறள். 84 )**

முகத்தில் இனிமையுடன் தகுந்த விருந்தினரை உபசரிப்பவன் வீட்டில் திருமகள் மனம் மகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருப்பாள்.

வள்ளுவரும் விருந்தினர்களை போற்றும் விதமாக மேற்சொன்ன குறளின் வாயிலாக ஒருவன் விருந்தினரை நாள்தோறும் உபசரிக்கும்பொழுது செல்வம் குறையாது மேன்மேலும் பெருகும். வீட்டில் திருமகள் மனமகிழ்வோடு வாழ்ந்துகொண்டிருப்பாள். ஆகவே உபசரிப்பவர் வாழ்க்கை ஒருபோதும் வறுமையினாலோ துன்பத்தினாலோ கெட்டுவிடாது சிறப்பாக இருக்கும்.என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

**"விருந்தின னாக ஒருவன்வந்து எதிரின்**
**வியத்தல்நல் மொழிஇனிது உரைத்தல்**
**திருந்துற நோக்கல் வருகென உரைத்தல்**
**எழுதல்முன் மகிழ்வன செப்பல்**
**பொருந்துமற் றவன்தன் அருகுற இருத்தல்**
**போம்எனின் பின்செல்வது ஆதல்**
**பரிந்துநல் முகமன் வழங்கல்இவ் வொன்பான்**
**ஒ ழுக்கமும் வழிபடும் பண்பே." ( வி.சிந்தாமணி. 55 )**

ஒரு மனிதன் விருந்தாளாகத் தன் இல்லத்திற்கு வந்து எதிர்தோன்றினால் அவ்விருந்தினனை மெச்சுதலும், அவனிடத்து மிருதுபாஷை மொழிதலும் இங்கிதத்துடன் அவனைப் பார்த்தலும், வருக என்று வரவேற்றலும், மரியாதையாக எழுவதும், அவனெதிரே அவன் சந்தோஷமடையக் கூடிய விஷயங்களை உரைத்தலும், வந்து சேர்ந்த அவனது சமீபமாக அமர்வதும், அவன் விடைபெற்றுச் செல்வானாயின் அவனுக்குப் பின்னே சிறிது தூரம் செல்லுதலும், (அவ்வாறு பின்சென்று வழியனும் போது) நேசமுற்று இதமான வார்த்தைகளைக் கூறுதலும் ஆகிய இந்த ஒன்பது வித நடத்தைகளும் ஒருவன் விருந்தினனை உபசரிக்கும் தன்மையாகும். என்று விவேகசிந்தாமணியில் விருந்தினரைப் போற்றும் விதமாகக் குறிப்பிடப்படுகிறது.

**சாவா மருந்து**

வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரித்து மகிழாமல் வெளியில் காக்க வைத்து தான் மட்டும் மனைவி மக்களோடு மறைவில் இருந்து உண்பது சாவினை நீக்கும் தேவாமிர்தம் ஆயினும் அது விரும்பத்தக்கது. விருந்து உபசரித்தல் என்பது அமிழ்தத்தை விட இனியதாகும் அத்தகைய செயலானது நமக்கு சாவா மருந்தாகப் பயன்படும். என்பதை வள்ளுவர்

**"விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா**
**மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று." (குறள் .82 )**

உண்ணப்படும் உணவு அமிர்தமே என்றாலும் ஒருவனை நினைத்து வந்த விருந்தினர் அவன் வீட்டின் வாசலுக்கு வெளியே இருக்க அவன் மட்டுமே உண்டல் விரும்பும் தன்மை உடையது அன்று என்று விளக்குகிறார் வள்ளுவர். இதனையே விவேக சிந்தாமணியிலும் அருஞ்சுவை உணவாக விருந்தோம்பல் இருக்கவேண்டும் என்பதை பின்வரும் பாடலில் சுட்டிக்காட்டப்படுகிறது.

**"கெட்ட சாறு தவிடு கஞ்சி**
**கிருமி உண்ட மாஅரைக்**
**கீரை வேர்த்தெ ளிந்த மோர்மு**
**றிந்த பாகு கிண்டுமா**
**இட்ட சோறு கொழியல் உப்பி**
**டாத புற்கை ஆயினும்**
**எங்கும் அன்ப தாக நுங்க**
**இன்ப மாயி ருக்குமே**
**பட்ட பாகு பசுவின் நெய்ப**
**ருப்பு முக்க னிகுழாம்**
**பாளி தங்கள் தாளிதங்கள்**
**பண்ணி கார வகையுடன்**
**அட்ட பால்கு ழம்பு கன்னல்**
**அமுத மோடும் உதவினும்**
**அன்பி னோட ளித்தி டாத**
**அசனம் என்ன அசனமே " ( வி.சிந்தாமணி. 58 )**

(ஒருவர் பரிமாறுகின்ற உணவானது) புளித்துப் போன குழம்பு, தவிடு, கூழ், புழுக்கள் பற்றிய மாவு, அரைக்கீரையின் வேர், கெட்டியாய் இல்லாத மோர், பக்குவம் தவறிய சருக்கரைப் பாகு, கிளறிய களி, நன்றாகத் தீட்டப்படாத அரிசியில் பொங்கி இடப்பட்ட சோறு, உப்புப் போடப்படாத நீராகாரம் ஆகிய இவையேயாயினும் அவ்வுணவானது அன்புடன் பரிமாறப்பட்டதாக இருக்க, அப்படிப்பட்ட உணவைச் சாப்பிட்டால் எவ்விடத்திலும் அது அருஞ்சுவையுடையதாயிருக்கும். பக்குவப்பட்ட தேன்பாகு, பசுநெய், பருப்பு வகைகள், முப்பழ வர்க்கங்கள், பால்சாத வகைகள், தாளிக்கப்பட்ட

கறிவகைகள், பலகார விதங்கள் போன்றவற்றுடன் சுண்டக் காய்ச்சப்பட்ட திரட்டுப்பால், சருக்கரைப் பொங்கல் முதலியவற்றுடனும் உணவு படைத்தாலும் நேசத்தோடு பரிமாறப்படாத அந்த உணவு என்ன உணவோ? (அன்போடு இடப்படாத அந்த உணவால் திருப்தி உண்டாவதில்லை.) என்று விவேக சிந்தாமணியும் இயம்புகிறது.

**விருந்தால் விளையும் பயிர்**

ஒரு உழவு செய்து தன் வாழ்க்கையினை நகர்த்திச்செல்லும் உழவன் முதலில் விருந்தினரை சாப்பிட செய்து பிறகு இருப்பதை நம் வீட்டில் உள்ள உறவுகளோடு உண்டு வாழ்ந்தால் உழவு செய்பவர்களின் நிலத்தில் விதை இடாமலேயே பயிர் தானாக விளையும் என்பதை உணர்த்தும் வகையில் திருக்குறளில்

**“வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்துஓம்பி**
**மிச்சில் மிசைவான் புலம்.” (குறள். 85 )**

முதலில் விருந்தினரை சாப்பிட செய்து பிறகு மீந்ததை தான் உண்பவனின் வயலில் விதையும் இடல் வேண்டுமோ? வேண்டாம் விதை இடாமல் தானாக விளையும் என்பதை திருவள்ளுவர் கூறுகின்றார்.

**நல்விருந்து**

தம்மை நாடி வந்த விருந்தினரை அன்போடு உபசரித்து பின்பு அடுத்த விருந்தினர்கள் வருகிறார்களா என்று ஆவலோடு காத்திருக்கின்ற உபசரிப்பாளன் அடுத்த பிறவியில் வானுலகத்தில் உள்ள தேவர்களுக்கெல்லாம் சிறந்த விருந்தின்னாகச் செல்வான் என்பதை வள்ளுவர் பின்வரும் குறளின் வழியாக எடுத்துரைக்கின்றார்.

**“செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு.” (குறள். 86 )**

தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்துப் பிறகு வரவிருக்கும் விருந்தினரை எதிர்பார்த்து அவர்களோடு சாப்பிட விரும்புபவன் மறு பிறப்பில் தேவனாக மாறி வானத்தில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினனாகச் செல்வான்.

**செல்வம் இருந்தும் பயனில்லை**

ஒருவன் தன்னுடைய அறிவற்ற செயலால் தம்மை நாடி வந்த விருந்தினரை சரியாக உபசரிக்கப்படாமல் விட்டுவிட்டால் நாம் தேடித்தேடி சேர்த்து வைத்த செல்வங்கள் இருந்தும் பயன் இல்லை. அத்தகைய அறிவற்ற செயலால் செல்வத்தால் பெறும் பயனை இழக்கச்செய்து இருக்கின்ற செல்வத்தையே இல்லை என்றாக்கிவிடும். அறிவாளிகள் அவ்வாறு இல்லாது சரியாக விருந்தினரை உபசரிப்பார்கள் ஆனால் அறிவற்றவர்கள் அவ்வாறு இருக்கமாட்டார்கள் என்பதை வள்ளுவர்

**“பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம் என்பர் விருந்து ஓம்பி**
**வேள்வி தலைப்படா தார்.” ( குறள்.88 )**

**“உடைமையுள் இன்மை விருந்துஓம்பல் ஓம்பா**
**மடமை மடவார்கண் உண்டு.” ( குறள்.89 )**

தன்னிடம் உள்ள செல்வத்தால் விருந்தினரை உபசரித்து அதன் மூலம் வேள்வியின் பயனை அடையும் விதி இல்லாதவர்கள் நிலைத்து நிற்காத அச்செல்வத்தைக் கஷ்டப்பட்டுக் காப்பாற்றிப் பிறகு அதனை இழந்து இப்போது நாம் ஆதரவு இல்லாமல் இருக்கிறோமே என்று வருந்துவார்கள். செல்வம் பெற்றிருக்கும் காலத்திலும் வறுமை என்பது விருந்தினரை உபசரிப்பதைச் செய்யாமல் விட்டுவிடும் அறிவற்ற செயல். அறிவாளிடம் இருக்காது அறிவு இல்லாதவரிடம் தான் இருக்கும். என்று திருக்குறளில் குறிப்பிட்டிருக்கின்றார்.

**பணயம் வைத்து உபசரித்தல்**

விருந்தினர்களுக்காக நம்மிடம் இருந்த பொருளை பணயம் வைத்து பொருளீட்டி அதை விருந்தினர்களுக்கு உபசரித்து பிறகு பணயம் வைத்த பொருளை மீட்கின்ற செய்தியைப் பற்றி பின்வரும் நற்றினைப் பாடல் ஒன்று எடுத்துரைக்கின்றது.

**“கள்ளின் வாழ்த்தி, கள்ளின் வாழ்த்தி,**
**காட்டொடு மிடைந்த சீயா முன்றில்,**
**நாட்செருக்கு அனந்தர்த் துஞ்சுவோனே,**
**அவன் எம் இறைவன் யாம் அவன் பாணர்**
**நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும் புடைப் பழவாள் வைத்தனன்” ( நற்றினை. 136 : 1-5 )**

இரவு முழுவதும் கள் உண்டதன் மயக்கம் மறுநாள் காலையிலும் நீங்காது வெளிப்பட்டுத் தோன்றும், கள்ளுண்போர் தாம் மயங்குதற்குக் காரணமாகிய கள்ளினை வாழ்த்துவர், என்பது கள்ளின் வாழ்த்தி, கள்ளின் வாழ்த்தி என இருகால் உரைத்தமையால் பெறப்படும். பாணர்கள் வீரனுடைய வெற்றியை யாழில் இசைத்துப் பாடும் இயல்பினர். முதல்நாள் வாளைப் பணயம் வைத்துப் பொருள் பெற்று விருந்தினரை உண்பித்த வீரன் போரிட்டுத் திரும்பி அவ்வாளை மீட்டமை உய்த்துணரப்படும்.

**முடிவுரை**

விருந்தோம்பல் என்பது தம்மைத் தேடி வந்த விருந்தினரை இன் முகத்தோடு வரவேற்று தம்மிடம் இருப்பதை அவருடன் அமர்ந்து மகிழ்வுடன் உபசரித்து விருந்தினர் மனம் மகிழச் செய்வது அறிவுடைய பண்பாளர்களுக்கு அழகாகும். அவ்வாறு உபசரிப்பதினால் நம்முடைய வாழ்நாள் முழுவதும் செல்வம் குறையாது புகழோடு வாழ்வதோடு, மறுபிறவியில் தேவர்களுக்கெல்லாம் சிறந்த விருந்தினராக உபசரிப்பவர்கள் செல்வார்கள். ஆகவே விருந்தோம்பல் பண்பு என்றும் மக்களிடம் போற்றப்பட வெண்டும். விருந்தோம்பல் பண்பானது அனைவரின் எண்ணங்களிலும் மலரவேண்டும். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் அறிவியல் விஞ்ஞான உலக வாழ்வில் விருந்தோம்பல் மேன்மையடைய வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

1. எளிய நடையில் திருக்குறள் பரிமேலழகர் உரை – முனைவர் தேவிரா
2. விவேக சிந்தாமணி - உரையாசிரியர் கவிஞர் பத்மதேவன்
3. நற்றிணை – உரையாசிரியர் முனைவர் கு.வெ.பாலசுப்ரமணியன்